ஒரு குழு அமைப்பதாகக் கூறினார்கள். அதில் சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சேர்க்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்போது பரிசீலனை செய்யலாம் என்று சொல்லியிருப்பது- ஒரு கருத்தரங்கம் நடத்த வேண்டும் என்று தான் மாண்புமிகு உறுப்பினர் லட்சுமணன் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அத்தகைய கருத்தரங்கில் அந்தக் கூட்டுறவிலே ஈடுபடக்கூடிய எல்லா மாண்புமிகு உறுப்பினர்களையும் அழைத்து அவர்களுடைய கருத்துக்களும் கேட்கப்படும், கோரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 334, திரு என்.ஆர். ராஜேந்திரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

334—

நெல் கொள்முதல் செய்யும்போது உரமான்யம் ஊக்கத் தொகையாக வழங்கல்.

** 15865 திரு என்.ஆர். ராஜேந்திரன்:*

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தற்போது அரசு வழங்கிவரும் உரமான்யத்தை ரத்து செய்துவிட்டு அரசு விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யும்போது உரமான்யம் ஊக்கத்தொகையாக வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

நெல் தனி உரிமை கொள்முதல் மூலம் காவிரி டெல்டாப் பகுதிகளில் மட்டும்தான் அரசால் மேற்கொள்ளப்படுகிறது. எனவே, அனைத்து பகுதி விவசாயிகளுக்கும் இந்தக் கோரிக்கையை செயல்படுத்துவதற்கு வாய்ப்பில்லை. மேலும், உர மான்யம் மத்திய அரசினால் அவ்வப்பொழுது அறிவிக்கப்படுகின்ற திட்டமாகும். ஒரு சில மான்யத்திட்டங்கள் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மட்டுமே பொருந்தும். எனவே, அதைச் செயல்படுத்த இயலாது.

முற்பகல் 10.50

திரு. என்.ஆர். இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு சிறு விவசாயிகளுக்காக புதிய புதிய சலுகைகளை வழங்கி வருகிறது. அந்தச் சலுகைகளைச் செயல்

படுத்தும் திட்டங்களில் ஒன்றுதான் மானிய விலையில் உரம் வழங்குவது. அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே உரம் வழங்கப்படும்போது எல்லா விவசாயிகளும் ஒரே நேரத்திலே பயிர் செய்யத் துவங்குவது இல்லை. பலப்பல காலங்களில் அவர்கள் விவசாயத்தைச் செய்வதனால் கொடுக்கப்படுகிற உரத்தை வாங்க வேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்படுவது இல்லை. இவற்றில் அரசு அதிகாரிகளும் ஆர்வம் கொள்வது இல்லை. இது தேவையான நேரத்திலே உழவர்களுக்கு போய் சேரவேண்டும் சிறு விவசாயிகளுக்கு அந்தச் சலுகை கொடுக்கப்பட வேண்டும், என்பதில் அலுவலர்கள் ஆர்வம் காட்டுவதில்லை. குறுவை, சம்பா போன்ற அறுவடைகள் ஆனபின்பும் உரம் வழங்குவது தேக்க நிலையிலேயே உள்ளது. இந்தத் திட்டத்தினால் தனியார் உரக் கடைகள்தான் பெரிதும் அந்த சிறு விவசாயிகளை வைத்து பலன் அடைந்துகொண்டு வருகின்றன. அதனால் இந்தத் திட்டத்தை மாற்றி அரசு நெல் கொள்முதல் செய்யும்போது ஒரு ஆயிரம் ரூபாய்க்கு நெல் வாங்கும்போது ஊக்கத்தொகையாக இவ்வளவு என்று சிறு விவசாயிகளுக்கு அளித்தால், நமக்கு நெல் கொள்முதல் செய்யும்போது அதிக நெல்லும் வந்து சேரும். கள்ளச் சந்தைகள் முடக்கப்படும். அதுமட்டுமல்ல...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ராஜேந்திரன், நீங்கள் விரிவாகப் பேசிக்கொண்டே போகிறீர்கள், கேள்விதான் கேட்க வேண்டும்.

திரு. என்.ஆர். ராஜேந்திரன்: செக்-போஸ்டுகள் இல்லாமலேயே மற்ற மாநிலங்களுக்கும், மாவட்டங்களுக்கும் நெல் கடத்தப்படுவது தடுக்கப்படும். அதனால் நெல் கொள்முதல் செய்யும்போது உர மானியப் பணம் ஊக்கத்தொகையாக அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உர மானியம் என்பது -- சிறு, குறு விவசாயிகள் மட்டுமே பயன்படுத்துவதற்காக அவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படுகிறது. இந்த அடையாள அட்டையை வைத்துக்கொண்டு அந்த உரம் வழங்கப்படுகின்ற இடத்தில் அங்கே உள்ள அலுவலரிடம் அடையாள அட்டையைக் காண்பித்து அதற்குரிய உரத்தினை அந்த அடையாள அட்டையில் பதிவு செய்ததற்குப் பின்னாலே தரப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தஞ்சை, திருச்சி, நாகை-காயிதே மில்லத், தென்னாற்காடு ஆகிய மாவட்டங்களில் ஏகபோகக் கொள்முதல் செய்யக்கூடிய விவசாயிகளுக்கு இந்த உர மானியத்தை நேரடியாகத் தர வேண்டுமென்று சொல்கிறார்கள். இங்கே இந்தக் கொள்முதல்

செய்யக்கூடியவர்கள் -- சிறு, குறு விவசாயிகளிடமிருந்தும் அரசு கொள்முதல் செய்கிறது, பெரிய விவசாயிகளிடமிருந்தும் கொள்முதல் செய்கிறது. கொள்முதல் செய்யக்கூடிய ஒரு குவிண்டால் நெல்லுக்கு 35 ரூபாய் ஊக்கத்தொகையை அரசு வழங்குகிறது. இந்த உர மானியம் என்பது தமிழகத்திலே உள்ள அனைத்து சிறு, குறு விவசாயிகளுக்கும் வழங்கக்கூடிய திட்டமாகும். இந்தத் திட்டம் 1991-92, 1992-93 ஆம் ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது தொடர்ந்து செய்யக்கூடிய திட்டம் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு.கே.ஆர். இராமசாமி அம்பலம்.

திரு.கே.ஆர். இராமசாமி அம்பலம்: தலைவர் அவர்களே, இந்த ஆண்டில் மத்திய அரசு உரத்திற்கு மானியமாக எவ்வளவு வழங்கி இருக்கிறது ? அதில் எவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு மத்திய அரசு உரத்திற்கு மானியம் வழங்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 335, திரு. காஞ்சி பன்னீர் செல்வம், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

335—

செய்யார், உத்திரமேரூர், காஞ்சிபுரம் ஆகிய இடங்களை மையமாகக்கொண்டு ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைத்தல்.

* *16342* **திரு. காஞ்சி பன்னீர்செல்வம் :**

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்- கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

செய்யார், உத்திரமேரூர், காஞ்சிபுரம் ஆகிய இடங்களை மையமாகக் கொண்டு ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம்: பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை என்ற சொல்லுக்கே இடம் இல்லை என்ற நிலையிலே எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி நடத்திக்கொண்டிருக்கின்ற